**செய்திக் குறிப்பு எண்.155** **நாள்: 15.12.2010**

**மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை கோபாலபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விழாவில், முதியோர் உதவித்தொகை மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி பேசியதாவது:**

முதியோர் உதவித்தொகை மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்தித்து உரையாற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று நடைபெறும் இந்த சிறப்பான விழாவில், ஆயிரம் விளக்கு தொகுதி மற்றும் சேப்பாக்கம் தொகுதியில் உள்ள 845 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை , விதவை உதவித் தொகை, கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. நபர் ஒருவருக்கு மாதம் உதவித் தொகை ரூபாய் 400 வீதம் 845 பயனாளிகளுக்கு 3 லட்சத்து 38 ஆயிரம் ரூபாயும், அதேபோன்று, அரசு நலத்திட்ட உதவிகள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் 15 பெண்களுக்கு ரூபாய் 25,000 வீதம் ரூபாய் 3 லட்சத்து 75 ஆயிரமும், சிவகாமி அம்மையார் நினைவு, 2 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் ஒரு குடும்பத்திலுள்ள இரண்டு பெண் குழந்தைகளுக்கு ரூபாய் 30,400 வீதம், 15 குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு ரூபாய் 4 இலட்சத்து 56 ஆயிரமும், மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் எந்திரம் 5 நபர்களுக்கு ரூபாய் 18 ஆயிரத்து 475 மதிப்பீட்டிலும், பாரதப்பிரதமரின் சுயவேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் கடன் பெறும் மாற்றுத் திறனாளிகள் 4 பேர்களுக்கு 38 ஆயிரத்து 750 ரூபாயும், ஆக மொத்தம் இன்றைக்கு 884 பயனாளிகளுக்கு 12 இலட்சத்து 26 ஆயிரத்து 225 ரூபாய் மதிப்பீட்டிலான உதவிகள் இந்த நிகழ்ச்சியின் மூலம் வழங்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு பேசிய மாவட்ட ஆட்சியர் சொன்னதைப்போல், தலைவர் கலைஞர் ஆட்சியில் பல சிறப்பான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு சலுகைகள், ஆயிரம் விளக்கு சேப்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு இன்றைய தினம் வழங்கப்பட உள்ளது. தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்று சென்னை மாவட்டத்தில் கடந்த 4நூ ஆண்டுகளில் முதியோர் உதவித் தொகை 22 ஆயிரத்து 16 நபர்களுக்கு ரூபாய் 88 லட்சமும், மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை 4307 நபர்களுக்கு ரூபாய் 17 லட்சமும், விதவை உதவித்தொகை 5 ஆயிரத்து 25 நபர்களுக்கு ரூபாய் 2 கோடியும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவித் தொகையாக 4 ஆயிரத்து 655 நபர்களுக்கு 18 லட்சத்து 60 ஆயிரமும், திருமணமாகாத, வாழ்வாதாரம் இல்லாத முதிர்கன்னியர்களுக்கு உதவித்தொகையாக 963 நபர்களுக்கு 3 லட்சத்து 58 ஆயிரமும் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் மூலம் இவர்கள் தொடர்ந்து, இந்த நிதியுதவியைப் பெற்று வருகின்றனர் என்பதை குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

சென்னை மாவட்டத்தில் இன்றைக்கு அனைத்து வகையான முதியோர் உதவித் தொகைகளையும் பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 41 ஆயிரத்து 543 ஆகும். இதற்காக சென்னை மாவட்டத்தில் மட்டும் மாதம் ஒன்றிற்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை ரூபாய் 9 கோடியே 66 இலட்சம் ஆகும். இதுவரை நான் சொன்னது, சென்னை மாவட்டத்திற்கான நலத்திட்ட உதவிகள் ஆகும். தமிழ்நாடு முழுவதும் கணக்கெடுத்துப் பார்த்தால், ஆதரவற்ற முதியோர், விதவைகள், மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை மாதம் 200 ரூபாய் என்பது 1.9.2006ல் 400 ரூபாய் எனவும், 24.11.2010 முதல் 500 ரூபாய் என மேலும் உயர்த்தப்பட்டு, மொத்தம் 21 இலட்சத்து 26 ஆயிரத்து 850 பேர் மாதம் 500 ரூபாய் வீதம் உதவித் தொகை பெறுகின்றனர்.

சென்னை மாநகராட்சி மூலம் கடந்த 4 1/2 வருடங்களில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதியில் முடிக்கப்பட்டுள்ள வளர்ச்சி பணிகள் பற்றி குறிப்பிட வேண்டுமென்றால், ஏராளமான சாலைகள் புதிப்பிக்கப்பட்டுள்ளன. நடைபாதைகள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு பூங்காக்கள் திறக்கப்பட்டுள்ளன. நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன், கடந்த 4 1/2 வருடங்களில் சென்னை மாநகராட்சி மூலம் ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதியில் சுமார் 1122 வளர்ச்சிப் பணிகள் ரூபாய் 103 கோடியே 67 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சி மூலம் நிவாரணத் உதவிகளை பெற்றவர்களுக்கு எனது வாழ்த்துக்களை இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும், தலைவர் கலைஞர் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிறப்பான வாய்ப்பிற்கு மீண்டும் ஒருமுறை எனது நன்றியினை தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. வெ. ஷோபனா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ. அன்பழகன், சென்னை மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் திரு.மா.பா. அன்புத்துரை, மாநகராட்சி ஆளுங்கட்சி தலைவர் திரு. இராமலிங்கம் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.